بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

In the Name of Allāh, the Most Gracious, the Most Merciful

# ஜும்ஆ உரை

## சக முஸ்லிம்களின் உரிமைகளை நிறைவேற்றுதல் (பாகம் 4)

கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மத் அஸீம்(அலை) அவர்கள் நிகழ்த்தியஜும்ஆ உரை



இந்த நூற்றாண்டின் முஜத்தித் மற்றும் மஸீஹ்

Tamil Translation of Friday Sermon by Khalifatullah Hazrat Munir Ahmad Azim dated on:

06 ஸபர் 1444

(02 செப்டம்பர் 2022)


**Jamaat Ul Sahih Al Islam**

Dhawa Department, Tamilnadu.

GOVT.REG NO 11/2018

Cell Number : 9486157897

E.Mail : Jusai.tn@gmail.com

# அல்லாஹ்விடம் மன்றாடுதல் - துஆ செய்தல்

..................................................................................

ஹஸ்ரத் கலிஃபதுல்லாஹ் முனீர் அஹ்மத் ஆஸிம்(அலை) அவர்கள் 02/09/2022
சக முஸ்லிம்களின் உரிமைகளை நிறைவேற்றுதல் (பாகம் 4) என்ற தலைப்பில் ஆற்றிய ஜும்ஆ உரை!

..................................................................................




# "சக முஸ்லிம்களின் உரிமைகளை நிறைவேற்றுதல்" (பாகம் 4)

---

**பிஸ்மில்லா ஹிர் ரஹ்மான் நிர்ரஹீம்**

உலகெங்கிலும் உள்ள தனது அனைத்து ஸஹாபாக்கள் (மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும்) ஸலாத்தினை தெரிவித்த பிறகு தஷஹுது, தவூத் மற்றும் சூரா அல் ஃபாத்திஹா ஓதியப் பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ் (அய்தஹு) அவர்கள் "சக முஸ்லிம்களின் உரிமைகளை நிறைவேற்றுதல்" (பாகம்-4) என்ற தலைப்பில் தமது ஜும்ஆப் பேருரையை நிகழ்த்தினார்கள்.

அல்ஹம்துலில்லாஹ்! ஸும்ம அல்ஹம்துலில்லாஹ்! கடந்த இரண்டு வாரங்களாக நமது சக முஸ்லிம்களது உரிமைகளை நிறைவேற்றுதல் மற்றும் மிகக் குறிப்பாக கடந்த வாரங்களில் பெற்றோர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எந்த அளவுக்கு கீழ்படிய வேண்டும் (அதாவது அதன் வரையறை), அதைப் போன்று வாழ்க்கைத்துணை(மனைவி) மற்றும் குழந்தைகளின் உரிமைகள் குறித்தும் பேசிய அதே உரையை இன்றும் தொடர்கிறேன்.

கடந்த வாரம் உங்கள் முன் நான் மேற்கோள் காட்டிய அதே உதாரணத்தின் பக்கம் திரும்புகிறேன், நிதி குறைவாக இருக்கும் பட்சத்தில், தந்தை அல்லது மகனின் அவசியமான மற்றும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னுரிமையின் அடிப்படையில், தந்தை மற்றும் மகன் இருவருக்கும் கண்கண்ணாடி தேவைப்படும் விஷயத்தில், வயதான தந்தை வீட்டிலேயே முடங்கியிருப்பதாலும், இளைஞனுக்கு அவன் முன் அவனது வாழ்வு மற்றும் இன்ன பிறவாய்ப்புகள் அனைத்தையும் (நிறைவேற்ற வேண்டிய கடமை) இருக்கும்போது, அறிவைத் தேடுகின்ற விஷயத்தைப் பொறுத்தவரை, அதுமார்க்க அறிவு மற்றும் கல்வி சார்ந்த அறிவாக இருந்தாலும் சரி, அவருக்கு கண் கண்ணாடியின் தேவை அதிகம் இருப்பதால் அவர் வாழ்க்கையில் எந்த சிரமமும் இல்லாமல் முன்னேற முடியும் [ எ.கா. பள்ளிக்குச் செல்வது, அறிவைத் தேடுவது போன்றவை ] .

ஆயினும், நம்பிக்கையாளர் தனது பெற்றோர் மற்றும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உரிமைகள் இரண்டையும் பூர்த்தி செய்ய போதுமான வசதிவாய்ப்புகளைக் கொண்டிருந்தால், அவர் அதைத் தவறாமல் நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ்வின் பாதையில் செல விடுவதாக இருந்தாலேத் தவிர, தன் பெற்றோர் மற்றும் குழந்தைகளை விட (மற்ற)இரண்டாம் நிலை செலவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது. சில சூழ்நிலைகளில் கூட, அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் சில தோழர்களுக்கு, அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வதற்குத் தயாராக வைத்திருந்ததைத் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் மற்ற வாரிசுகளுக்காகவும் செலவிடு மாறு அறிவுறுத்துகிறார்கள். அதற்கு ஓர் உதாரணம் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிப்பதாக பின்வரும் அறிவிப்பில் வருகிறது: “நீங்கள் விரும்புகின்ற (செல்வத்) திலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் (நிறைவான) பலனை அடைந்துகொள்ளமாட்டீர்கள்” (3:92) எனும் இறைவசனம் அருளப்பட்டபோது அபூதல்ஹா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் தன் வேதத்தில், ‘நீங்கள் விரும்புகின்ற (செல்வத்)திலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் அல்-பிர்ர் (நிறைவான) பலனை அடைந்துகொள்ளமாட்டீர்கள்’ என்று கூறுகின்றான்.

**என் செல்வங்களிலேயே எனக்கு மிகவும் விருப்பமானது பைருஹா’ (எனும் தோட்டம்)தான். அந்தத் தோட்டத்தில் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் சென்று நிழலில் ஓய்வெடுத்து அதன் தண்ணீரை அருந்துவது வழக்கம் ஆகவே, அதை நான் அல்லாஹ்வுக்காகவும் அவனுடைய தூதருக்காகவும் (அறக்கொடையாகத்) தந்துவிடுகிறேன். (மறுமையில்) அதன் நன்மையை யும் (மறுமை வாழ்வுக்கான) என் சேமிப்பாக அது இருப்பதையும் நான் விரும்புகிறேன். ஆகவே, அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு அல்லாஹ் எவ்வாறு அதனைப் பயன்படுத்த வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளானோ அதன்படி அதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று கூறினார்.**

**இதைக் கேட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “மிகவும் நல்லது, அபூ தல்ஹாவே! அது (மறுமையில் உங்களுக்கு) இலாபம் தரும் செல்வமாகும். அதை உங்களிடமிருந்து ஏற்று உங்களிடமே திருப்பித் தருகின்றோம். உங்கள் நெருங்கிய உறவினர்களிடையே அதைப் பங்கிட்டுவிடுங்கள்” என்று கூறினார்கள்.**

அபூதல்ஹா(ரலி) அவர்கள் அதைத் தம் இரத்த சொந்தமுள்ள உறவினர் களுக்குத் தர்மம் செய்துவிட்டார்கள். அவர்களிடையே (அதாவது பங்கீட்டை

பெற்றவர்களில்) உபை பின் கஅப் (ரலி) அவர்களும், ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்களும்கூட இருந்தனர். (புஹாரி)

இப்போது, ஜிஹாத் பற்றி, ( الدر المختار) தர்ருல் முக்தாரில் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது: "**குழந்தைகள் மற்றும் பருவ வயதை அடைந்தவர்கள், அவர்களுக்கு பெற்றோரில் இருவரோ அல்லது ஒருவரோ உயிருடன் இருக் கிறார்கள் என்றால் அத்தகையவர்கள் மீது ஜிஹாத் [ஃபர்ள்-ஐன் முறிக்க முடியாத] கட்டாய கடமையல்ல, ஏனென்றால் அவர்களுக்கு சேவை செய்வது கட்டாயமானதாகும், அல்லது அத்தகைய குழந்தைகளுக்கு, அவர்கள் [அதாவது பெற்றோர்] சம்மதம் தெரிவித்தாலேத் தவிர, ஆபத்து நிறைந்தபயணம் மேற்கொள்வது அனுமதிக்கப்பட்டதல்ல. பயணத்தில் ஆபத்து இல்லை என்றால், அவர்கள் அனுமதியின்றி செல்லலாம், அறிவை/ கல்வியைத் தேடும் பயணம் என்பது அத்தகைய பயணங்களில் ஒன்றாகும்**

ரத்துல் முஹ்தாரில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "தங்கள் பிள்ளைகள் (ஆபத்தானதாக இருக்கக்கூடிய) இத்தகைய பயணங்களை மேற்கொள்வ தால் தாங்கள் (பெற்றோர்கள்) பெரும் சிரமத்திற்கு ஆளாக நேரிடும் என்ற போது அத்தகைய பயணங்களை மேற்கொள்வதில் இருந்து, தங்கள் குழந்தைகளைத் தடுக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு. பெற்றோர்கள் நிராகரிப்பாளர்களாக இருந்தாலும் கூட, இதே விதி பொருந்தும். இருப்பினும், நிராகரிப்பாளர்களான பெற்றோர்கள் தங்கள் (முஸ்லிம்) குழந்தைகளை அவர்களை (அதாவது பெற்றோர்) சார்ந்துள்ள மார்க்க வாதிகளுக்கு எதிராக நடத்தப்படும் ஜிஹாதில் (பங்கு கொள்வதில்) இருந்து தடுத்தால், குழந்தைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டாம். ஆயினும், அவர்கள் (பெற்றோர்) நிராகரிப்பாளர்களாக இருந்தாலும் கூட, அவர்கள் (பெற்றோர்கள்) ஏழைகளாகவும், தங்கள் குழந்தைகளைச் சார்ந்தவர்களாகவும் இருப்பார்களேயானால் அவர்கள் (குழந்தைகள்) தங்கள் பெற்றோருடன் இருந்து அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும். [ஃபர்ள் ஐன்- அதாவது] கடமையான மற்றும் கட்டாயமான கடமையை ஃபர்ள் கிஃபாயாவிற்காக தியாகம் செய்யப்படலாகாது. (ஜிஹாத் என்பது ஃபர்ள் கிஃபாயா [அதாவது ஒரு சமூகம் சார்ந்த கடமை] ஆகும் மேலும் பெற்றோருக்குச் சேவை செய்வது ஃபர்ள் ஐன் [அதாவது நம்பிக்கையாளர் மீது கட்டாயமான கடமை] ஆகும்.

ஆபத்தான பயணங்கள் என்பது ஜிஹாத் மற்றும் கடல் பயணங்கள் தொடர்பானவையாகும். பயணத்தில் எந்த ஆபத்தும் இல்லையென்றால் (பெற்றோர்களின்) அனுமதியின்றி பயணத்தில் புறப்படுவது அனுமதிக் கப்படுகிறது. குழந்தைகள் புறப்பட்டால் அவர்கள் பெரும் துன்பத்திற்கு

கஷ்டத்த்திற்கு ஆளாவார்கள் என்றிருக்கும் போதேத் தவிர, பயணத்தில் எந்த ஆபத்தும் இல்லையென்றால், அவர்களின் அனுமதியின்றி வணிகம், ஹஜ் மற்றும் உம்ரா போன்றவற்றிற்காக பயணம் மேற்கொள்ளலாம். அதேப்போன்று, (மார்க்க) அறிவை/கல்வியைத் தேடும் பயணத்திற்கும் அனுமதியானது அதிக அளவில் பொருந்தும்.

தற்போது, பெற்றோருக்கு (கொடுக்க வேண்டிய) உரிமைககளை எவ்வாறு மனைவியின் மீதான உரிமைகள் விஷயத்தின் நெருக்கடியில் மிதிபட்டு போய் விடக்கூடாது என்பதைப் பார்ப்போம். பெற்றோரின் உரிமைகளின் வரம்புகளையும் அதேப்போன்று மனைவியின் உரிமைகளின் வரம்பு களையும் மேலும் அவர்களின் உரிமை குறித்து இஸ்லாத்தின் கட்டளைக்கு எதிராக சென்று விடாமல் இருதரப்பு உரிமைகளையும் எவ்வாறு சமநிலைப் படுத்துவது என்பதை ஒரு நம்பிக்கையாளர் அறிந்திருக்க வேண்டும்.

தர்ருல் முக்தாரில் பராமரிப்பைக் கையாளும் அத்தியாயத்தில் பின்வருவது பதிவு செய்யப்பட்டுள்ளது:

**"தன் மனைவிக்கு அவனது உறவினர்களோ அல்லது அவளது உறவினர்களோ யாரும் வசிக்காத அத்தகைய வீட்டைக் கொடுப்பது என்பது (கணவன் மீது) வாஜிப் (கடமை)ஆகும்."**

ரத்துல் முஹ்தார் இது சம்பந்தமாக பல்வேறு பதிவுகளை விவரித்த பிறகு கூறுகிறார்:

**“ஒரு பணக்கார மற்றும் மரியாதைக்குரிய மனைவிக்கு ஒரு மிதமான வீட்டை வழங்க வேண்டும் என்பது வாஜிப்(கடமை) ஆகும்."**

இருப்பினும், ஒரு வீடு பாரம்பரியமாக பல சகோதரர்களால் பெறப்பட்டு, அவர்கள் அந்த வீட்டை இன்னும் சிறு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு வரும் அவரவர் பிரிவில் (தனித்தனியாக) வசித்தாலும் கட்டிடத்தின் உரிமை களும் கடமைகளும் அனைவருக்கும் பொதுவானவையாக இருக்கிறதோ அங்கு ஒரு விதிவிலக்கு இருக்கின்றது.

மேலும், ஹக்கீம் பின் முஆவியா அல்-குஷைரி அவர்களால் அறிவிக்கப்பட்ட ஒரு ஹதீஸில், அவர்களின் தந்தை கேட்டதாக கூறியதை மேற்கோள் காட்டினார்கள்:

**“அல்லாஹ்வின் தூதரே! எந்த மனைவியும் தன் கணவனிடம் எதனை உரிமை கோர முடியும்?” என்று கேட்கும் போது, “நீ உண்ணும் போது**

**அவளுக்கும் உண்ணக் கொடு, நீ ஆடையணியும் போது அவளுக்கும் ஆடையணிக் கொடு, அவளை முகத்தில் அடித்து விடாதே, அவளை ஒரேயடியாக வெறுக்காதே, அவளை வீட்டில் வைத்தே தவிர மற்ற இடங்களில் கண்டிக்காதே" என்று நபியவர்கள் கூறினார்கள். [இந்த கட்டளை சூரா அன்-நிஸா 4:35 இல் கூறப்பட்டுள்ள குர்ஆன் கட்டளைக்கு ஒத்துள்ளது]. (அஹ்மத், அபு தாவூத், இப்னுமாஜா)**

ஷரீஅத்தின் படி அவர்கள் (குழந்தைகள்) மீது கடமையாக்கப்பட்டுள்ள ஒரு செயலையோ அல்லது கட்டளையையோ நிராகரிக்கும்படி பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு கட்டளையிட்டால் அவர்களுக்கு கீழ்ப்படிவது அனுமதிக்கப்பட்டதல்ல! சச்சரவுகளின் அத்தகைய சந்தர்ப்பங்களில் கீழ்ப்படிதல் அனுமதிக்கப்பட்டதல்ல! அவர்களின் கட்டளைகள் ஷரீஅத்தை மீறக்கூடிய இந்த விஷயங்களில் அவர்களுக்குக் கீழ்ப்படிதல் கடமையாக்கப்பட்டு உள்ளது என்ற எண்ணத்தை விட்டுவிடுங்கள்.

**பின்வரும் விஷயங்கள் இந்த விதியின் எல்லைக்குள் வருகின்றன:**

1. ஒரு மனிதனின் நிதி நிலை எத்தகையதாக இருக்கின்றது என்றால் அவர் தனது பணத்தில் இருந்து அவரது பெற்றோருக்கு (அதாவது எந்த தேவையும் இல்லாமல் அவனது சொந்த வீட்டிலேயே வாழும் பெற்றோருக்கு) உதவி வழங்கினால் அவரது மனைவியும் குழந்தைகளும் துயரத்திற்கு தள்ளப் படுவர். அவரது வருமானம் அவரது பெற்றோருக்கும் அதேப் போன்று அவரது குடும்பத்திற்கும் வழங்குவதற்கு போதுமானதாக இல்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒரு மனிதன் அவரது பெற்றோருக்கு செலவு செய்வதன் மூலம் தனது மனைவி மற்றும் குழந்தைகள் மீது கஷ்டங்களை சுமத்துவது அனுமதிக்கப்பட்டதல்ல. இந்த விதியின் பயன்பாடானது தேவைகளோடுத் தொடர்புடையதேத் தவிர ஆடம்பரங்களுக்கல்ல. மேலும், பெற்றோர்கள் அவனுடன் (ஒன்றாக) வாழாமல் இருந்தாலும் கூட, தேவையுடையவர்களாக இருந்தால்; இருப்பார்களேயானால், பிறகு அவரது பெற்றோரின் அவசிய மான அடிப்படைத் தேவைகளை வழங்குதல் என்பது அவர் மீது கடமையாகும்.

2. கணவரின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடமிருந்தும் பிரிந்து வாழ (அவள் அதை விரும்பினால், அதற்குரிய) கோரிக்கை வைத்தல் என்பது மனைவியின் உரிமையாகும். எனவே, மனைவி இந்த உரிமையைக் கோரு கிறாள், பெற்றோர்களும் அவர்களை (துங்கள் மகன் மற்றும் மருமகளை) அவர்களுடன் (பெற்றோர்களுடன்) சேர்ந்து வாழ வலியுறுத்துகின்றனர் என்றால், இந்த விஷயத்தில் பெற்றோரின் கட்டளையை ஏற்க கணவருக்கு

அனுமதிக்கப்பட்டதல்ல. சர்ச்சைக்குரிய கோரிக்கைகளின் இந்த விஷயத்தில், மனைவிக்கு குடியிருக்க தனி இடம் கொடுக்க வேண்டும் என்பது வாஜிப் (கடமை) ஆகும்.

3. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை உம்ரா, ஹஜ் மற்றும் தேவையான அறிவை (ஒருவர் மீது கட்டாயம் (பெறவேண்டிய) அளவிலான தீனி அறிவை) பெறுதல் ஆகிய விஷயத்தில் தடுப்பார்களேயானல், பின்னர் அவ்விஷயத்தில் அவர்களின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிவது அனுமதிக்கப்பட்டதல்ல.

4. ஷரீஅத்தில் தடுக்கப்பட்டுள்ள எந்த விஷயத்திலும் உதாரணமாக இஸ்லாத்தில் அனுமதிக்கப்படாத அத்தகைய வேலையை செய்வதற்கு அவர்கள் (பெற்றோர்) குழந்தைகளை கட்டளையிடுகிறார்கள் என்றாலோ அல்லது அவர்கள் தங்கள் பிள்ளைகளை (தீனில்) அனுமதிக்கப்படாத நிகழ்ச்சி, கூட்டங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் பித்அத் [புதிய வழக்கங்கள்] போன்றவற்றில் பங்கேற்க விரும்புகிறார்கள் என்றாலோ, (அவ்விஷயத்தில்) பெற்றோருக்குக் கீழ்ப்படிவது அனுமதிக்கப்பட்டதல்ல!

தற்போது, அனுமதிக்கப்பட்ட அத்தகைய செயல்கள் தொடர்பான விதி குறித்தும்; கடமை இல்லாததும் அல்லது தடை செய்யப்படாத செயல்களின் விதிக் குறித்தும் (பார்ப்போம்). பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அனுமதிக்கப்பட்ட செயல்களை செய்யவோ அல்லது அதிலிருந்து விலகி இருக்கவோ கட்டளையிட்டால், அப்போது சூழ்நிலைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒருவர் எதையாவது சார்ந்திருந்து, (பிறகு) அதிலிருந்து விலகி இருத்தல் (அவருக்கு) சிரமத்தை ஏற்படுத்தி விடும் என்றால், பின்னர் (அதனை செய்ய) அனுமதி மறுக்கும் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது (அவருக்கு) கடமையல்ல. அதனால் அவர் (அவ்விஷயத்தில்) அப்பணியை செய்வதற்கு அனுமதிக்கப் படுகிறார்.

உதாரணமாக: உள்நாட்டில் வேலை கிடைக்காத ஏழை ஒருவர் தனது வாழ்வாதாரத்தை தேடி வேறெங்காவது பயணம் செய்ய முடிவு செய்கிறார், ஆனால் அவரது பெற்றோர் அவர் செல்வதற்கு அனுமதி மறுக்கின்றனர். இந்த விஷயத்தில், பெற்றோரின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய கட்டாயம் அவருக்கு இல்லை.

இருப்பினும், உத்தேசிக்கப்பட்ட (அனுமதிக்கப்பட்ட) வேலை இன்றியமை யாததாக இல்லாமலும், ஒருவர். (வருமானத்திற்கு / உத்தேசிக்கப்பட்ட)

அவ்விஷயத்தில்) அதையேச் சார்ந்து இல்லாமல் அல்லது அதைச் செய்வதில் பேராபத்து உள்ளது என்றாலோ அல்லது மகன் இல்லாத காரணத்தால் பெற்றோர்கள் சிரமப்படுவார்கள், ஏனெனில் அவர்களின் கவனிப்பிற்க்கான வேறு எந்த பொருத்தமான ஏற்பாடுகளும் சாத்தியமாக இல்லை என்றாலோ, பின்னர் பெற்றோரின் விருப்பத்தை எதிர்ப்பது அனுமதிக்கப்பட்டதல்ல.

உதாரணமாக, கடமையல்லாதப் போரில் பங்கேற்பது, அல்லது கடல் பயணம் மேற்கொள்வது அல்லது பெற்றோர்களுக்கு உரிய கவனிப்பிற்கான ஏற்பாடு இல்லாமல் மேற்கொள்ளப்படும் பயணம் போன்றவை. இவ்விஷயத் தில் பயணம் இன்றியமையாத ஒன்றாக இல்லை, (ஆகவே) பெற்றோருக்குக் கீழ்ப்படிவது கடமையாகும். மாறாக, பயணத்தில் எந்தவொரு ஆபத்தும் இல்லை என்றாலோ அல்லது பெற்றோரை கவனிக்க போதிய ஏற்பாடுகள் இருக்கின்றது என்பதனால் மகனின் பயணம் அவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாது என்றாலோ, பின்னர் பெற்றோர் எதிர்த்தாலும் கூட அந்த வேலையிலோ அல்லது பயணத்திலோ பங்கேற்க அனுமதியுள்ளது. இது அனுபதிக்கப்பட்டதாக இருந்த போதிலும், இந்த விஷயத்திலும் கூட அவர்களின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பதென்பது முஸ்தஹப்- பரிந்துரை செய்யப் பட்டதாகவே இருக்கும். பின்வரும் உதாரணமானது இந்த விதியின் நோக்கத்திற்குள் வரும்.

ஒருவேளை பெற்றோர்கள் குறிப்பிட்ட எந்த காரணமும் இல்லாமல் மனைவியை மணவிலக்கு கொடுக்குமாறு கூறினால் அதற்கு கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. அதைப்போன்று மகன் சம்பாதிக்கும் அனைத் தையும் பெற்றோர்கள் பெற விரும்பினால் அதனை நிறைவேற்றுவது மகனுக்கு கட்டாயமில்லை. இன்னும் கூறுவதென்றால் மகன் சம்பாத்தியம் அனைத்தையும் கொடுக்குமாறு பெற்றோர் கட்டாயப்படுத்தினால் அது பாவமாகும்.

எனவே நீங்களும் உங்கள் செல்வங்களும் உங்கள் தந்தைக்கு சொந்த மானவை என்று தொடங்கும் நபிமொழியின் பொருள் நான் உங்களுக்கு விளக்கியதை போல், எந்த சந்தர்ப்பத்தில் எனபதற்கு ஏற்றவாறு பொருந்தக் கூடியதாகும். இன்னும் தெளிவாக விளக்குவதென்றால் ஒரு தந்தை அவரின் அடிப்படைத் தேவைக்குமேல் அவரது மகனிடம் இருந்து பெறுபவரென்றால், அது அவருக்கு கடனாகி விடுகிறது. அதை அவர் திருப்பி செலுத்த வேண்டும். ஒருவேளை இந்த உலகத்தில் செலுத்தவில்லை என்றால் மறுமையில் அவர் செலுத்த வேண்டியதிருக்கும்.

எனவே நம்பிக்கைக் கொண்ட அடியார்கள் அவர்களின் அன்பிற்குரியவர்களின்

உரிமையை பகிர்ந்தளிக்க வேண்டும். குறிப்பாக அவர்களின் மரியாதை யையும், கவனிப்பில் அவர்களின் உரிமைகளைப் பேணுவதிலும் ஒரு சமநிலையைப் பேணவேண்டும். அந்த எல்லாம் வல்ல இறைவன் முஸ்லிம் களுக்கும், இன்னும் குறிப்பாக எனது அன்பிற்குரிய ஸஹாபிகளுக்கும் இந்த உண்மையான இஸ்லாத்தை அவர்களின் வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வானாக! மேலும் இத்தகைய நன்னடத்தையை வாழ்வில் நடைமுறை படுத்துவதன் மூலம் அழகிய இனிமையான இஸ்லாத்தின் போதனைகளை மற்றவர்களுக்கும் கற்பிப்பதற்கு அருள்புரிவானாக! இன்ஷாஅல்லாஹ் ஆமீன்!.

..........................................................

# கலீபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள்!

நம்பிக்கையாளர் தனது பெற்றோர் மற்றும் குழந்தைகளின் அடிப்படைத் தேவைகள் மற்றும் உரிமைகள் இரண்டையும் பூர்த்தி செய்ய போதுமான வசதிவாய்ப்புகளைக் கொண்டிருந்தால், அவர் அதைத் தவறாமல் நிறை வேற்ற வேண்டும். அல்லாஹ்வின் பாதையில் செலவிடுவதாக இருந்தாலேத் தவிர, தன் பெற்றோர் மற்றும் குழந்தைகளை விட (மற்ற)இரண்டாம் நிலை செலவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது. சில சூழ்நிலைகளில் கூட, அல்லாஹ்வின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் சில தோழர்களுக்கு, அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்வதற்குத் தயாராக வைத்திருந்ததைத் தங்கள் சொந்தப் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் மற்ற வாரிசுகளுக்காகவும் செலவிடுமாறு அறிவுறுத்தியிருக் கிறார்கள். அதற்கு ஓர் உதாரணம் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிப்பதாக பின்வரும் அறிவிப்பில் வருகிறது: “நீங்கள் விரும்புகின்ற (செல்வத்) திலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் (நிறைவான) பலனை அடைந்துகொள்ளமாட்டீர்கள்” (3:92) எனும் இறைவசனம் அருளப்பட்டபோது அபூதல்ஹா (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் தன் வேதத்தில், ‘நீங்கள் விரும்புகின்ற (செல்வத்)திலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் அல்-பிர்ர் (நிறைவான) பலனை அடைந்துகொள்ளமாட்டீர்கள்’ என்று கூறுகின்றான்.